# உதயதாரகை.—MORNING STAR.

*Published on the 2d and 4th Thursday of every Month at one shilling a Quarter payable in advance.*

௫ம். புத்தகம் சஞ்சிகை ௰௪.] ௲௮௱௪௫ ஜூல. ஆடி ௰௨. ௨௪. தேதி வியாழக்கிழமை Thursday, July 24, 1845. [Vol. V. No. 14.

## இதிகாசச் சுருக்கமும் காலநிருபண விளக்கமும்.

அதற்குப்பின்பு உரோமர் கார்தேசினியரோடும் முதற் பியூனிக் யுத்தமென்று வழங்கும் போரை நடப்பித்தார்கள். இருபத்துநான்கு வருஷம் நடந்த இந்த யுத்தத்தினால் உரோமர்சிசிலியென்னுந் தீவைச் சுதந்தரமாகப் பெற்றதுமன்றிக் கார்தேசினியர் தங்களுக்குத் தாழ்ச்சியாய் ஒரு சமாதானசம்பந்தத்தைச் செய்யும்படி அவர்களை வலித்தார்கள்.

முதலாம் இரண்டாம் பியூனிக் யுத்தத்துக்கிடைப்பட்டகாலத்தில் உரோமர் தங்களுக்குவிரோதமாய்க்கலகம்பண்ணின இத்தாலிதேசத்திற் சிலகோத்திரத்தாரைத் தமனித்ததுமன்றிக் கோர்சிக்காசார்தீனியாமேல்தா, என்னுந் தீவுகளைவசப்படுத்தினார்கள். இரண்டாம்பியூனிக்யுத்தத்தைக் கார்தேசினிய சேனாபதியாகிய இளைய அனிபலென்பவன் வைராக்கியத்தினால் மூட்டினான். இவன் உரோமருடன் சமாதான சம்பந்தத்தில் சேர்ந்த சகுந்த நகரத்தாரைத் தகைந்துகொள்ள வகைதேடிய பொழுது உரோமர் அதை விலக்கும்படி கையிட்ட எதுக்கள் சித்திபெறுமையால் அவ்விருபட்சத்தாருக்கும் யுத்தம் உண்டாயிற்று. ஆனிபலென்பவன் ஆபிரிக்கா இஸ்பேன் என்னுந் தேசங்களைப் பேணிக்கொள்ள எத்தனம் செய்துகொண்டு பிரனீயசென்னும் மலையைக் கடந்து தன் சேனையோடும் ரோனென்னும் நதிவரைக்கும் வழிச்சென்று எல்ப்ஸ் என்னும் மலையினுச்சிவழியாய் இத்தாலிதேசத்துச் சமபூமியை அடைந்து அங்கே தனது அத்திரவித்தியாசாமர்த்தியத்தினாலும் அதிபத்திய உபாயங்களினாலும் பதினாறு வருஷமளவுக்கு நிலைத்திருந்து பலமுறை அணிவகுத்த யுத்தங்களில்உரோமரை வெற்றிகொண்டான். இக்கதனைகள் நடந்துவருங்காலத்தில் உரோம சேனாபதிகளிலொருவனாகிய சிபியோவென்பவன் ஸ்பேன் தேசத்திற் கார்தேசினியருடைய சேனைகளை வென்றபின்பு ஆபிரிக்காவிற் சென்று கார்தேசு நகரத்தாரைப் பயமுறுத்தினான். அப்பொழுது அனிபேலென்பவன் தன் சென்ம நகரத்தைப் பரிபாலிக்கும்படி திரும்ப வரவழைக்கப்பட்டான். இவன் தான் இத்தாலிதேசத்தை விட்டு நீங்குவது புத்தியீனமென்று கருதினதினால் துக்கத்தோடும் புறப்பட்டான். கிறிஸ்துஅவதரிக்க ௱௯௬ வருஷத்துக்குமுன் சாமாவென்னுமிடத்திற் சிபியோவென்பவனை எதிர்த்துக்கொண்டான். கூலிக்குப் படையெடுத்த அவனுடைய சேனைகள் சிபியோவென்னுஞ் சேனாபதியுடைய சேனைகளைப் பார்க்கிலும் இழிந்தனவாதலாற் றோல்வியடைந்தன. அதன் பின்பு கார்தேசினியருக்குத் தாழ்வாய் முடியும்படி ஓர் சமாதான சம்பந்தம் பண்ணப்பட்டது.

உரோமர் சுயாதிபத்தியத்திற்கு இணையான இந்த இராச்சியத்தைத் தங்களுக்கமையும்படி கீழ்ப்படுத்துதற்கு மாத்திரமின்றி அவர்களிற் சிலமந்திரிமார் அதை அழித்துப்போடுதற்கும் விரும்பி அதற்குப் பிரயத்தனம்செய்தார்கள். அப்படியே இவர்கள் கார்தேசைத் தகைந்துகொள்ள அந்நகரத்தார் மிகுந்த உற்சாகத்துடன் தங்களைக் காக்கப் பிரயத்தனஞ்செய்தும் அவர்களிலொருத்தனே அவர்களைச் சத்துருக்கள்கையில் அகப்படுத்தினதினால் இவர்கள் ஆக்கிரமத்துடன் நகரத்தைப் பிடித்துக் கிறிஸ்து அவதரிக்க ௱௪௬. வருஷத்துக்கு முன் நிர்மூலம்பண்ணினார்கள்.

எதீனியர் தங்களுக்குச் சகாயம்செய்ய உரோமரை வேண்டிக்கொள்ள உரோம இராச்சிய ஆலோசனைச் சங்கத்தார் கிறிஸ்து பிறக்க ௨௱ வருஷத்துக்கு முன் மகிதோனியருக்கு விரோதமாகப்படையெடுத்தார்கள். இந்தப்போர் நாலுவருஷம் நிகழ்ந்தபின்பு பிலிப்பென்னுமிராசா பிளமினியஸ் என்னும் உபராசனால் தோல்வியடைந்து சமாதான சம்பந்தத்திற்சேர இணங்கினான்.

இந்தக் கதனைகள் நடந்தபின்பு உரோமப்பிரசைகளுக்கும் பிரபுக்களுக்கும் ஓர் வாக்குவாதமுண்டாய்ப் பிரசாதிபத்தியத்தை அழிப்பதற்கேதுவாயிருந்தது. ஒரு ஊராதிகாரியாகிய தைபீரியஸ் கிறேகஸ் என்பவன் எந்த நகரத்தாரும் செயித்த தேசங்களில் எண்ணுயிரம் இலாச்ச நிலத்துக்கு மேற்படச் சுதந்தரித்துக்கொள்ளக்கூடாதென்று காணிபகுக்கும் விதிநிருபிக்கத் துணிந்தமையால் ஆலோசனைச்சங்கத்தார் மூர்க்கங்கொண்டு ஓரதிகாரியைத் தெரிந்துகொண்ட பொழுது உண்டான கலகத்தில் கிறேகஸ் என்பவனையும் அவனுடைய கூட்டாளிகளில் முந்நூறுபேரையும் கொன்றுபோட்டார்கள். கிறேகஸ் என்பவனதுசகோதரனாகிய கயசென்பவனும் அதிகாரியாயிருந்தபோது குறிக்கப்பட்ட விதிநிருபிக்கத் துணிந்தமையால்தன்னதிகார உத்தியோகத்தைநீங்கியபின்கொல்லப்பட்டான்.

கிம்பிராயரும் தியூத்தோனியரும் இத்தாலிதேசத்தைச் சேதப்படுத்தத் துணிந்தபோது அவர்களுக்கு விரோதமாய் அனுப்பப்பட்டமாரியசென்பவன் அவர்களைவென்று எண்ணிறந்தபேரை வதைசெய்தான். ஆனால் அவன் அகங்காரமும் பொறாமையுமுள்ளவனாய் நடந்தபடியினாலே இராச்சியத்தில் வெகு கலகங்க

## HISTORY AND CHRONOLOGY.

[Continued from page 98.]

Soon after this, the Romans were engaged in the first war with the Carthaginians; usually called the first Punic war. The war continued 24 years, and ended in the Romans' obtaining possession of Sicily, and forcing the Carthaginians to conclude a peace on very disadvantageous terms.

The interval between the first and second Punic wars was occupied in subduing some tribes of Italy that had revolted; and also in taking possession of Corsica, Sardinia, and Malta. The second Punic war was purposely provoked by the younger Hannibal, now general of the Carthaginian army. He found a pretext for attacking Saguntum, a city in alliance with Rome. The Romans remonstrated, but in vain; and war was the consequence. Hannibal, having taken measures for securing Africa and Spain, crossed the Pyrenees, then continued his march to the Rhone; and scaling the Alps with his army, descended into the plains of Italy. There, by a series of able measures, military and diplomatic, he maintained himself for 16 years, defeating the Romans in several pitched battles. At length Scipio, the Roman general, after defeating the Carthaginian forces in Spain, passed over to Africa, and threatened Carthage itself. Hannibal was recalled to defend his native city. He left Italy with regret, and contrary to his own judgment. He encountered Scipio at Zama; but his army, consisting chiefly of mercenaries, was unequal to the army which Scipio commanded, and was defeated, B. C. 196. Peace was then made on terms for Carthage still more humiliating.

The Romans, however, were not satisfied with humbling this rival republic. It was a favourite maxim with some of their statesmen, that Carthage should be overturned. The city was besieged; the people defended themselves with the greatest resolution; but, being betrayed by one of their own citizens, the city was taken by storm, and destroyed B. C. 146.

An application for protection from Athens, induced the senate to declare war against Macedon B. C. 200. This contest lasted four years, when Philip, having been defeated by the Consul Flaminius, agreed to peace.

After this, a contest commenced between the patricians, and plebians, which ended not till it had effected the ruin of the republic. Tiberius Gracchus, a tribune, proposed or Sempronion law, by which no citizen was permitted the Agrarian to hold above 500 acres of conquered lands. This attempt so irritated the senators, that during the tumult of an election, they assassinated Gracchus and 300 of his partizans. His brother Caius Gracchus, when tribune, made a similar attempt; and on his return to a private station, was persecuted to death.

The Cimbri and Teutones, threatening to cover Italy with desolation, Marius was sent against them, and defeated them with immense slaughter. But his ambition and revengeful spirit brought innumerable calamities upon the republic.

ளைத் தோற்றுவித்தான். இவைகளெல்லாம் நடந்தபின்பு உரோமர் போந்தசென்னுந் தேசத்து அதிபதியாகிய மித்துருடேற்றிசென்னுமிராசாவுக்கு விரோதமாய்ப் படையெடுத்தார்கள். இவன் உரோம சேனாதிபதிகளிலொருத்தனுக்குப் பரிதானங் கொடுத்துப் பிறிக்கியா தேசத்தைப் பெற்றுக்கொண்டான். இவன் அதினின்று சில்லாவென்பவனால் துரத்திவிடப்பட்டதினிமித்தம் உரோமருக்கு மிகவும் விரோதியானான். மித்துருடேற்றிஸ் என்பவன் அவர்களை விரோதித்ததினாலுண்டான தீமையிலும் பார்க்க உரோமர் அதை நீக்கும்படி நடப்பித்த யுத்தத்தினாலேதான் அதிக கேடு உண்டாயிற்று. ஏனெனில், அந்த யுத்தத்தை நடப்பிப்பவனுக்கு மிகுந்த லாபம் உண்டாகும் ஆதலால் அதை நடப்பிக்கும்பொருட்டுச் சில்லாவும் மரியசும் ஒருவரோடொருவர் வாதமிட்டுக்கொண்டார்கள். மரியசென்பவன் சனங்களுக்குப் பிரீதியுள்ளவனாயிருந்தபடியால் அவர்கள் அவனையே யுத்தத்தை நடப்பிக்கும்படி ஏற்படுத்தினார்கள். சில்லாவென்பவனோ அதைக் கேட்டறிந்து ஏறக்குறைய, ௩௬௲. சேனைகளோடும் உரோம நகரத்திற் சென்று மரியசென்பவனும் தப்பியோடின அவனுடைய கூட்டாளிகள் பதினொருவருந் தள்ளப்படும்படி செய்தான். சில்லாவென்பவன் இனி ஒரு மோசமும் வாராதென்று நினைத்து மித்துருடேற்றிசென்பவனோடும் யுத்தஞ் செய்யத் திரும்பிப்போய்விட மரியஸ் என்பவன் உரோமபுரிக்குத் திரும்பிவந்து வெகு சனங்களையும் மேம்பாடான ஆலோசனைச் சங்கத்தாரையும் வதைத்துச் சில்லாவென்பவன் விதித்த கட்டளைகளை மாற்றினான். பின்பு தன்னையும் சின்னாவென்பவனையுமே அதிகாரிகளாக ஏற்படுத்தும்படி செய்து பதினாறு நாளைக்குள்ளே மாய்ந்துபோனான். சில்லாவென்பவன் இத்தாலி தேசத்தினின்று மீண்டுவந்தபின் அவ்விடமெங்கும் ஊர்க்கலகமுண்டாயிற்று.

சில்லாவென்பவன் எங்கும் வெற்றிசிறந்தவனாய் உரோம நகரத்தின் மிக ஆரம்பத்துடன் சென்று தேசாசாரங்களைக் கெடுத்து மேன்மைபொருந்திய ஆலோசனைச் சங்கத்தாரின் எண்பது பேரையும் இன்னும் அனேகாயிரம் பிரசைகளையும் மகா அபவாதமாக்கித் தன் சத்துருக்களை வதைக்கும்படி தன் சேனைகள்வசமொப்புவித்தான். மரியஸ் என்பவனுடன் பிறந்தார் மகனாகிய சியூலியஸ் சீசர் வதைக்கப் படுதற்கேதுவாயுந் தப்பிக்கொண்டான். பொம்பி சில்லாவென்பவனுக்கு அத்தியந்த நேசமுள்ள நண்பனாயிருந்தான். சில்லா கிறிஸ்து அவதரிக்க, ௭௮. வருஷத்துக்குமுன் காலஞ் சென்விட்டான்.

பின்னும் ஊர்க்கலகம் ஒழியாமல் நின்றதுமன்றி இராச்சியத்துக்கு விரோதமாயெழுந்த, ௪௰௲. சிறைகளை அடக்கும்படி ஓர் யுத்தம் நடந்தது. இந்த யுத்தங்களில் பொம்பியானவன் தன்னஸ்திரவித்தையின் சாமர்த்தியத்தைக் காட்டினதினால் உரோமசேனைகளுக்கு அதிபதியாக ஏற்பட்டுப் போர்தஸ்தேசத்திராசாவாகிய மித்துருடேற்றிஸ் என்பவனுக்கு விரோதமாக அனுப்பப்பட்டு அந்த இராசாவை வெற்றிகொண்டான். வென்றபின்பு போந்தஸ் தேசத்துக்கப்பாற் சென்று அறமேனியா சீரியா பலஸ்தயினென்னுந் தேசங்களை வசப்படுத்திக்கொண்டு அங்கே நின்றுந் திரும்பிக் கிறிஸ்து அவதரிக்க, ௬௩. வருஷத்துக்கு முன் உரோம நகரத்திற் சேர்ந்தான்.

இந்தக்கதனைகள் நடந்துவருங் காலத்தில்சியூலியஸ்சீசரென்பவன் மேற்றிசையில் தனது சாமர்த்தியத்தை விளங்கப்பண்ணியிருந்தான். ஸ்பேன் தேசத்திலிருந்து செயம்பெற்றவனாக உரோம நகரத்துக்குவந்தபோது அந்நகரத்தார் கலகக்காரராகி இரு பட்சத்தாராகப் பிரிந்தார்கள். ஒரு பட்சத்தார் பொம்பியிடத்திலும் மறுபட்சத்தார் உரோமருக்குள்ளே மகா ஐசுவரியவானாகிய கிறசசென்பவனிடத்திலுஞ் சேர்ந்திருந்தார்கள். கிறசசென்பவன் அவர்களைத் தன்னோடுங் கூடி அத்தேசத்தை இராச்சிய பரிபாலனம்பண்ணும்படி ஏவினான். இப்படி முதன்முதல் மூவருளொன்றான ஓரதிபத்தியம் ஸ்தாபிக்கப்பட்டது.

கிறசஸ் தனதுத்தியோகத்தைக் கைக்கொண்டவுடனே பார்திய தேசத்துக்குப் போய் யுத்தஞ்செய்து தோல்வியடைந்து கொலையுண்டான். இதனாலே மூவருள் ஒன்றான அதிபத்தியம் ஒழிந்துபோயிற்று. ஏனெனில் தான்தான் தலைப்பட வேண்டுமென்னுமபேட்சையுடன் பொம்பியும் சீசரும் ஒருவரோடொருவர் விவாதம்பண்ணிக்கொண்டார்கள். பொம்பியென்பவன் ஆலோசனைச் சங்கத்தாரில் மேன்மைபெற்றிருந்ததுபோலச் சீசரென்பவன் சேனைக்குள்ளே மேன்மைபெற்றிருந்தான். சீசர் உரோம நகரத்திற் சேர்ந்து பொம்பியைத் துரத்திவிடப் பொம்பி கிரேக்க தேசத்திற் போய்ச் சீசரை எதிர்க்கச் சேனைகளைத் சேகரித்துக்கொண்டான். சீசரென்பவன் அங்கே போய்ப் பார்சேலியாவிற் சந்தித்தெதிர்த்து முழுவதும் செயங்கொண்டான். பொம்பி எகிப்து தேசத்துக்குத் தப்பிப் போய் அங்கே சதிமானமாய்க் கொலையுண்டான். சீசர் உரோம நகரத்துக்குத் திரும்பிவந்தபோது மிகுந்த ஆடம்பர மகிமையுடன் எதிர்கொள்ளப்பட்டான். ஆனாலும் ஆலோசனைச் சங்கத்தாருடைய மண்டபத்தில் பொம்பியென்பவனுடைய உருவமாகிய சிலையைச் சமீபித்து நிற்கும்போது சதிசெய்து கொல்லப்பட்டான்.

The next important war in which the Romans were engaged, was that with Mithridates, king of Pontus. This prince obtained possession of Phrygia, by bribing one of the Roman generals. He was driven out of it by Sylla; and this expulsion laid the foundation of determined enmity to the Romans. But this war was the occasion of more disastrous consequences to the state, than the resistance of Mithridates. Sylla and Marius contended for the privilege of conducting the war, which was likely to prove lucrative. Marius gained the popular interest and was appointed to the command; but Sylla marched to Rome, with six legions, proscribed Marius, and eleven of his adherents, who fled. Sylla, now deeming himself secure, returned to prosecute the war with Mithridates; but Marius came back to Rome, massacred great numbers of citizens and distinguished senators, and abrogated the laws of Sylla. Marius then caused himself to be elected consul with Cinna; but survived his election only sixteen days. Italy, on Sylla's return, became the theatre of civil war.

Sylla, every where victorious, entered Rome in triumph, trampled on the laws, proscribed 80 senators and several thousands of citizens, and gave up his enemies to military execution. Julius Cesar, who was nephew of Marius, narrowly escaped the carnage, while Pompey was a zealous partizan of Sylla. Sylla died, B. C. 78.

The civil war still continued; and also a servile war against about 40,000 rebel slaves raged. Pompey so much distinguished himself in these wars, that he was visited with the supreme command of the Roman army, and sent against Mithridates; king of Pontus, whom he subdued; and carrying the war beyond Pontus, he subdued Armenia, Syria, and Palestine. From these conquests, he returned to Rome B. C. 63.

Meanwhile, Julius Cesar was signalizing himself in the west. Returning in triumph from Spain, he found Rome divided into two factions; the one attached to Pompey, the other to Crassus, who was the richest of the citizens, and these he pursuaded to unite with him in sharing the empire among them. This was the first triumvirate.

Crassus, on entering on his province, made war on Parthia; and was defeated and slain. This broke up the Triumvirate; for Pompey and Cesar, coming into direct collision, a contest immediately arose who should be at the head of the state. Pompey had chief influence in the senate; Cesar among the soldiers, Cesar marched to Rome and forced Pompey to retire. Pompey went to Greece, where he raised an army to withstand Cesar. Tither Cesar followed: and encountering him at Pharsalia, totally defeated him. Pompey fled to Egypt, where he was treacherously murdered. When Cesar returned to Rome, he was greeted by the acclamations of the citizens; but, almost immediately afterwards, was assassinated in the senate-house, at the foot of Pompey's statue.

[To be continued.]

## ஆத்தும நிண்ணயம்.

[Child's Book on the Soul.]

௭ம். சல்லாபம்.

௯௯ம். பக்கத்தினின்று.

தாய். மைந்தா ஒரு செவ்வந்தி மலருக்கு என்ன வாசனை உண்டு?

மகன். சுகந்த வாசனை உண்டு.

தா. இரவெங்காயத்திற்குச் செவ்வந்தி மலரைப்போல வாசனையுண்டோ?

ம. இல்லையம்மா அதற்குமிதற்கு மிகுந்த வேற்றுமையுண்டு. வெங்காயத்தின் நாற்றமெனக்குப்பிரியமில்லை.

தா. இப்பொழுது ஒரு செவ்வந்திமலரையும் இரவெங்காயத்தையும் நீ முகராமலிருக்க அவைகளில் ஒன்றுக்கொன்று வித்தியாசமுண்டென்று உனக்கெப்படித் தெரியும்?

ம. முகராதிருந்தாலும் அவைகளுக்கின்ன வாசனையென்றும் இன்னும் அநேக பதார்த்தங்களுக்கின்ன வாசனையென்றும் நான் சிந்தித்தறியலாம்.

தா. அப்படியானால் முகராத சமையத்தில் சில பதார்த்தங்களை நீயே முகருவதுபோல நினைக்கவுங்கூடுமல்லவா?

ம. ஆம் அம்மா இதுவுமன்றி சிலவேளை எனக்குச் சலதோஷம் பிடித்ததினால் வாசனை தோன்றாதிருந்தாலும் இன்னவின்ன பதார்த்தத்துக்கின்னவின்ன வாசனையுண்டென்றறிவேன்.

தா. நீ காலூன்றாதிருந்தால் நீயே ஓடுவதாக நினைப்பாயோ?

ம. அப்படியு நினைப்பேனென்று நம்புகிறேனம்மா.

தா. மாம் பழமோ கொய்யாப் பழமோ எது உன்னாவுக்கு உருசிகரமுள்ளது?

ம. கொய்யாப்பழத்தைப் பார்க்கினும் மாம்பழமே அதிக மதுரமாயிருக்கும்.

தா. ஆகிலுமொரு மாம்பழத்தையாவது கொய்யாப்பழத்தையாவது இப்பொழுது நீ ருசிபார்க்கவில்லையே.

ம. ஆகிலுமவைகளுக்கின்ன ருசியுண்டென்றறிவேன்.

தா. அப்படியானால் ருசித்துப் பாராதசமையத்திலு நீயே சில பதார்த்தங்களை உருசிப்பதுபோல நினைக்கலாமல்லவா?

ம. ஆம் அம்மா.

தா. ஒரு குழலினோசையோ மேளத்தினோசையோ எது உன் காதுக்கின்பம்?

ம. குழலினோசை அம்மா, அல்லாமலும் யோவானென்னும் என் சிறிய தகப்பன் தனது தீங்குழலாலூதுகிறதைக் கேட்கிறதாக இப்பொழுது நான் நினைக்கக்கூடும்.

தா. அப்படியாகில் கேளாதிருக்கு நேரத்திலு நீயே ஓசைகளைக்கேட்கிறதாகவு நினைக்கலாமல்லவா?

ம. ஆம் அம்மா, இன்னும் ஒன்றைத் தொடாமலும் பாராமலுமிருக்கும் வேளையிலும் சில காரியங்களை நான் தொட்டுப் பார்க்கிறதாக உணரவுங் கூடும் ஒரு கல்லையும் என் பந்தையும் உமது கையையுநான் தீண்டும்பொழுது அவைகளை எப்படிப் பரிசிக்கிறேனென்று நான் சிந்திக்கவுங் கூடும்.

தா. நீ குளிராயிருக்கும்போது அதை எவ்விதமாய் உணருவாயென்று நினைக்கக் கூடுமோ?

ம கூடும் அம்மா மேலும் நான் பசியுந் தாகமும் வியாதியும் உட்டணமுமாயிருக்கும் வேளையில் இன்ன இன்ன வகையாயுணர்வேனென்றறிவேன்.

தா. மைந்தா நீ அப்படி உணர்வது மிகுந்த வாச்சரியமல்லவா?

ம. இதற்குமுன் இதைப் பற்றி அறியாமலிருந்ததே ஆச்சரியம். கடிகாரம் செவ்வந்திமலர் பருக்கைக்கல் இவையெல்லாவற்றிற்கு மேலாயிருக்கிற வேற்றுமையான வஸ்து என்னிடத்திலிருக்கிறதென்ன? அதேது? அதன்பேரென்ன என்னம்மா?

தா. அதை நானுனக்குச் சொல்ல இன்னுமாயத்தமாயிருக்கவில்லை. இப்பொழுது நீபோய் விளையாடுவது நலம். நாம் பேசினது போதும்.

## CHILD'S BOOK ON THE SOUL.

DIALOGUE VII.

(Continued from page 99.)

Mother. Robert, how does a rose smell?

Robert. It smells sweet.

M. Does an onion smell like a rose?

R. No, mother. but very different. I do not like the smell of an onion.

M. How do you know? You are not smelling a rose and an onion.

R. But I can think how they smell; and I can think how a great many other things smell.

M. Then, you can *think that you are smelling things when you are not smelling them?*

R. Yes mother, and sometimes when I have a bad cold, and cannot smell at all, still I can think how things smell.

M. And suppose you were lame, could you think that you were running?

R. I believe I could, mother.

M. And suppose you were blind, could you think of seeing things?

R. Yes mother, I believe I could.

M. Which do you like best,—a peach or an apple?

R. A peach; it tastes a great deal the sweetest.

M. But you are not tasting a peach, or an apple.

R. No, mother, but I can think how they taste.

M. You can *think, then, that you are tasting things, when you are not tasting them?*

R. Yes, mother.

M. Which do you like to hear best—a flute, or a drum?

R. A flute mother; and I can think, now, that I am hearing uncle John play on his flute.

M. Then, you can *think that you are hearing things, when you are not hearing them?*

R. Yes, mother, and so I can *think that I am feeling things, when I am not feeling them.* I can think how a stone feels and how my ball feels, and how your hand feels.

M. And can you think how *you feel,* when you are cold.

R. Yes mother, and how I feel when I am warm and when I am hungry, and when I am dry, and when I am sick.

M. Robert, is not all this very strange?

R. Mother, I wonder I never thought about it before. What is it that I have which is so different from any thing that the watch has or the rose, or the pebble? What is it what do you call it, mother?

M. I am not quite ready to tell you yet. And it is best, now, for you to go and play a little. We have talked long enough.

## THE LETTER WRITER.

LETTER XX.

*The Brother's Answer.*

DEAR BROTHER,

I received your kind letter, and am glad to hear you are well, as also of the progress you make in learning. I read your letter to your papa and mamma, and they are much pleased with it Billy Thomson dines at our house to-morrow, and he will bring you this. Your mamma has sent you half-a-guinea; and as you are so fond of books, I have sent you Rollin's Belles Lettres. Mr. Austin, our curate, says, that although all sorts of history are useful, yet he thinks you should begin with that of your own country; and he has sent you a present of Russel's History of England, which is ornamented with a set of the most elegant copper-plates extant in this kingdom. I have sent you the globes, and some other things, which you will find packed up in the box. We all beg that you will continue to persevere as you have begun, in an uniform course of virtue. It will entitle you to the favour of God, be a pleasure to your parents, and turn out to your own advantage at the last.

I am Dear brother, yours affectionately.

## சகலவித காகிதவிளக்கம்.

௨௰ம். காகிதம்.

அந்தத்தமையனுத்தரம்.

அன்புள்ளதம்பியே,

நீ அன்புவைத்தெழுதிய காகிதமெனக்கு வந்து சேர்ந்தது. உன் சுகத்தையும் வித்தையின் விருத்தியையும் நான் (அறிந்து) சந்தோஷமடைந்து (நமது) அப்பாவுக்கும் அம்மாளுக்கும் உன் கடதாசியைப் படித்துக் காட்ட அவர்கள் அதற்கு மிகவுஞ் சந்தோஷப்பட்டார்கள். பில்லி தாம்சன் நாளை மத்தியானம் நம்முடைய வீட்டிற் சாப்பிட வருகிறார். அவரிதை உனக்குக் கொண்டுவந்து கொடுப்பார். அம்மாளுனக்கு ஏழு இறைசாலனுப்பியிருக்கிறாள். புஸ்தகங்களின் மேலுனக்கத்தனை இச்சையிருப்பதால் ரோலினென்பவருடைய சாஸ்திர நூல்களுனக்கனுப்பியிருக்கிறேன். நமக்குபதேச குருவாகிய ஆஷ்டினென்பவர் எல்லாச் சரித்திரங்களுமுபயோகமுள்ளவைகளானாலும் உன் சென்ம தேச சரித்திரத்தையே நீ முதல் வாசிக்கவேண்டியதென்றும் ரசலென்பவரெழுதிய இங்கிலீசு தேச சரித்திரத்தை உனக்கு வெகுமதியாக அனுப்பியிருக்கிறார். அது இந்தத் தேசத்துளெங்குமில்லாத மாசற்ற வழக்கான படங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. நீ கேட்ட ஒரு சோடு உண்டையுமல்லாமல் இன்னஞ் சில பண்டங்களுமட்டைகட்டிப் பெட்டிக்குள் வைத்துனக்கனுப்பியிருக்கிறேன். நீ நடந்துகொள்ளத்தொடங்கிய நன்னடக்கையையெந்நாளுமோரே சீராய்ச் சாதித்துவா நாங்களெல்லாம் பிரார்த்திக்கிறோம். உன்னை அது சுவாமியுடைய தயவுக்குரியவனாக்கி உன்றாய் தந்தைகளுக்குன்னைப் பிரியப்படுத்திக் கடைசியிலுனக்கே நன்மையாயிருக்கும்.

இப்படிக்கு

பிரியமுள்ள தம்பியே அன்புள்ள

உன்றமையனாகிய இன்னான்.

## BRIEF HISTORICAL VIEW OF CEYLON.

### இலங்கை இராசாக்களின் வரலாறு.

(Continued from page 100.)

முன் சொல்லப்பட்ட பராக்கிரமவாகுவின் இராச்சியத்தின் எட்டாமாண்டிலே ருகுணையிற் பிரதானிகள் கலகம்பண்ணிப் பெரிய அழிவை உண்டாக்கினார்கள். அக்கலகத்தை அமர்த்தும்படி அவன் தன் மந்திரியை அவ்விடத்துக்கனுப்ப அவன் போய் நெடுங்காலம் அவர்களோடே சண்டைசெய்து அநேக நாசமோசங்களை அடைந்தும் பின்பு அவர்களை மேற்கொண்டு அவர்களைப் பிடித்து மற்றவர்களுக்குப் படிப்பனையாகச் சிலரைச் சிரபங்கம்பண்ணியுஞ் சிலரைக் கழுவேற்றியுங் கொன்றான். அதன்மேல் அவன் சிலநாள் அங்கே தங்கி சிற்றுறையென்னுந் தலத்திலே மகாநாகபுரமென்னுமொரு பட்டினத்தைக் கட்டினான்.

காமபோசம் அரமனையென்னுமிடங்களில்இராசா சிங்களசனங்களை வெகுமானவீனமாய் நடத்திவந்தான். எப்படியெனில், யானை வியாபாரிகளாய்ப்போனவர்களைக் கொள்ளையிட்டு, இலங்கையின் தூதரின் கண் கால்கை முதலிய உறுப்புகளை ஊனப்படுத்தி அவர்களை மலையக்கரைக்கேற்றி விட்டான். இராசா இதெல்லாவற்றையுங்கண்டு தனது இராச்சியத்தின் பதினாறும்வருடத்திலே ஐந்துமாசக்காலமாக அநேகங் கப்பல்களைச் சம்பாரித்து வெகு சேனை போர்வீரரை அவைகளிலேற்றிச் சேனாபதியாயிருந்த தமிழ் அதிகாரமென்பவனைப் படைத்தலைவனாக நியமித்து அவர்களுக்கு ஒரு வருஷத்துக்குத் தகுதியான போசன பதார்த்தங்களையுஞ் சம்பாரித்துக்கொடுக்க அவர்கள் உடனே மார்க்கத்திலே கப்பலேறி அரமனையிலே இறங்கி அந்த இராசாவை வெற்றிகொண்டார்கள். அதினாலே இலங்கை இராசா சீர்ப்பட்டிருக்கிற வேளையில் குலசேகரபாண்டியன் இலங்கைமேலே படையெடுத்துவருகிறவர்களுக்கெல்லாம் எப்பொழுதும்ஒத்தாசைசெய்து வந்தானென்று அறிந்து அவனையுஞ்சற்றே பயமுறுத்திவைக்கவேணுமென்று நினைத்து இலங்கைநாதனென்ற சேனாபதிக்குக் கீழாக வெகுசேனையை அனுப்ப அவர்கள் இராமேசுபுரத்தையும் அதற்கடுக்க ஆறுநாடுகளையும் பிடித்துக் குலசேகரபாண்டியனை அவனுடைய இராசதானியை விட்டுத் துரத்தி அவன் குமாரன் வீரபாண்டுவென்பவனைச் சிங்காசனத்திலேற்றினார்கள். குலசேகரபாண்டியன் சோழனைத் தனக்குத் துணையாகச் சேர்த்துக்கொண்டு தன் இராச்சியத்தை மீளவும் பிடித்துக்கொள்ள எத்தனம்பண்ணி மூன்றுமுறையாய் எதிர்த்துமபசயப்பட்டுப் போனான். அதுசமயங்கண்டு இலங்கைநாதன் சோழனுடைய இராச்சியத்திலும் எழுகாத ஊரைப் பிடித்துக்கொண்டான். பின்பு குலசேகரன் இலங்கைநாதனிடத்துக்கு வந்து அவனுடைய விருப்பப்படியெல்லாம் நடந்துகொண்டபடியினாலே அவன் இராச்சியத்தைத் திரும்பவும் அவனுக்குக் கையளித்து சோழனிடத்திலெடுத்த தேசப்பகுதிக்கு வீரபாண்டுவை முதன்மைப்படுத்தித் தானெடுத்த கொள்ளைகளையுங் கொண்டு இலங்கைக்கு மீண்டுவந்தான். அவன் செய்த பணிவிடைகளுக்குக் கைமாறாகப் பராக்கிரமவாகு அவனுக்கு வெகு காணி பூமி ஆதீனங்களைப் பண்ணினான். பராக்கிரமவாகு தன்னுடைய வீரமும் புகழுமான இராச்சியகாலத்தின் கடைசியிலே உள்ளூர்க்காரியங்களைப்பார்த்து அநுராசபுரம் பொல்லன்றுவா முதலிய தலங்களிலுள்ள திருப்பணிகளைச் செப்பனிட்டு அவன் கட்டுவித்த பராக்கிரமசமுத்திரமென்னுங் குளத்துக்குக் கற்கங்கையின் தண்ணீரைக் கொண்டுவரும்படி கோதாவிரியென்ற வாய்க்காலையும்மின்னெறிக்குளத்திலிருந்து வடதிசைக்குத் தண்ணீர் பாய்ச்சும்படி காளிநதியென்ற வாய்க்காலையும் காளாவிக்குளத்திலிருந்து அநுராசபுரத்துக்குத் தண்ணீர் பாய்ச்சும்படி செயகங்கையென்றவாய்க்காலையும் உண்டாக்கினதுமல்லாமல் இன்னும் அநேகம் நீர்நிலைகளையுமுண்டாக்கினான்.

(௲௱௮௬) லே அவன் சகோதரியின் குமாரனான இரண்டாம் விசையவாகு இராசாவாகி ஒருவருஷம் மாத்திரம் இராச்சியம்பண்ணினான். அவன் மகா விவேகியாயிருந்ததுமன்றி அரமனைத்தேசத்திராசாவுக்கு ஒரு சாதுரியமான சீட்டை மகத பாஷையிலே எழுதி அனுப்பித் தாங்களிருவரும் அநுசரிக்கிற புத்தசமயத்தின் சில போதகங்களைக் குறித்துண்டான பேதத்தைத் தீர்மானம்பண்ணுகிறதற்குத் தகுந்த வித்துவத்தன்மையுள்ள குருக்கள்மாரை இலங்கைக்கு அனுப்பச் சொல்லிக் கேட்டுக்கொண்டான். ஆனால் அதற்கு மறுமொழிவருகிறதற்குமுன்னே தனக்கும் பட்டத்துத்துரையாய் ஏற்படுத்தப்பட்டிருந்த மிகுந்துவென்பவனுக்கும் ஒரு கோவிச்சியைக்குறித்துண்டான வழக்கலே மிகுந்துவென்பவனாற் கொல்லப்பட்டான்.

(௲௮௭) லே ஐந்தாம் மிகுந்துவென்பவன் இராசாவாகி ஐந்துமாதங்களாக இராச்சியம் பண்ணிக்கொண்டிருக்கக்கொள்ளக் கொலையுண்டான். இவன் இராசகுடும்பத்தானல்ல. கலிங்க இராச்சியத்திலுள்ள சிங்கபுரத்தை அரசாண்ட சிறீசாயகோபனுக்குப் பார்பதி மகாதேவி பெற்ற வீரகீர்த்தி நிசாங்கமளவனென்பவன் சகல கலைக்ஞானங்களையுங் கற்றுணர்ந்து தனது புகழை உலகமெங்கும் பரப்பிவரும் நாளையில் இலங்கைத்தீவின் இராசாவான இரண்டாம் விசையவாகு என்பவன் தனக்குப் பின் இலங்கை இராச்சியத்துக்குத் தலைவனில்லையென்று கண்டு அவனை இலங்கை அரசுக்குரிய பிரதானியாய் வரும்படி எழுத அவன் விசைய இராசாவின் (௲௭௱ம்) வருஷத்திலே தனது தேசத்தை விட்டு ஓடமேறி இலங்கையிற்சேர்ந்தான்.

(௲௱௮௭)ன் பிற்பகுதியிலே அவன் இலங்கைக்கு இராசாவாகி (௯) வருஷம் அரசுசெய்தான். இவன் தம்புளவிகாரையிலிருந்த (௭௱) புத்தசிலைகளுக்குப் பொற்பூச்சிடுவித்தான். பலவிகாரைகளையுங் கட்டுவித்தான். மேலும் திரவியத்திலும் சவுரியத்திலும் சங்கையிலும் இவன் அதிகப்பட்டு வரவரத் தன்னையும் தன்னுடைய தேவிமாராகிய கலிங்க சவுந்தர மகாதேவியையும் கங்கை வங்கிஷ காலிங்க மகாதேவியையும் தன் மகன் வீரவாகுவையும் மகள் சருவாங்க சவுந்தரியையும் வெவ்வேறாய்த் தராசிற்போட்டு நிறுத்து அந்தந்த நிறைபொன்னைக்குருக்கள், புரோகிதப்பிராமணர், ஊனர், வறியவர்கள் முதலானவர்களுக்குக் கொடுப்பான். இவன் பல கட்டளைப்பிரமாணங்களையும் உண்டாக்கினான். அவைகளில்அநேக பிரதிகளை (௫) கல்லுக்களில் தீட்டுவித்து இரண்டைப் பொல்லன்றுவாவிலும்ஒன்றைத் தம்பூளிலும் நிறுத்தினான். அவனிறந்துபோனபின்பு அவன் குமாரன் வீரவாகு இராசாவாகிய அன்றிரவுதானே பரிசாரகனொருவனாற் கொல்லப்பட்டான்.

(௲௱௯௬) லே கீர்த்திநிசாங்கமளவனுடைய தம்பி இரண்டாம் விக்கிரமவாகு இராசாவாகி மூன்றாமமாசத்திலே கொலையுண்டிறந்தான். அவன் மருகன் ஒன்பதுமாதமாக ஆளுகைசெய்தான். அப்பால் பராக்கிரமவாகுவின் கைம்பெண் லீலாவதியைக்கீர்த்தியென்னும்மந்திரி கல்யாணம்பண்ணி அவனைப்பிடித்து இரண்டு கண்களையும் பிடுங்கிப்போட்டு லீலாவதியைப் பிரசஸ்தியாக்கி அவள் நாமத்திலே மூன்று வருஷம் அரசுசெய்தான். அவன் சாகசமளவன் என்பவனாலே பட்டத்திலிருந்து தள்ளப்பட்டான்.

---

### நாலடியார்.

#### இளமைநிலையாமை—Instability of Infancy.

௫. சொற்றளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையி
னாயப்

பற்கழன்றுபண்டம்பழிகாறுமிற்செறிந்து
காமநெறிபடருங்கண்ணினார்க்கில்லையே
யேமநெறிபடருமாறு.

| பதம். | உரை. |
|---|---|
| சொற்றளர்ந்து | சொல்லுந்தளர்ந்து |
| கோலூன்றி | கோலையுழன்ற |
| சோர்ந்த | தளர்ந்த |
| நடையினாய் | நடையுடையவர்களாய் |
| பற்கழன்று | பற்களுதிர்ந்து |
| பண்டம் | உடம்பானபண்டம் |
| பழிகாறும் | பழிப்பையடையும்படி |
| இல் | இல்லறத்தில் |
| செறிந்து | நெருங்கி |
| காமத்தின் | காமத்தின் |
| நெறி | மார்க்கத்தில் |
| படரும் | செல்லும் |
| கணணினார்க்கு | பெருமையையுடையவர்களுக்கு |
| ஏமம் | தமக்குக் காவலாகிய மோட்சத்தின் |
| நெறி | மார்க்கத்தில் |
| படருமாறு | செல்லும்வழி |
| இல்லையே | இல்லையே, எ—று. |

# MORNING STAR.

## Jaffna, July 24th, 1845.


### DIVINE HELP.

Man may rely upon his own resources in circumstances of difficult enterprise, or threatening danger, and may dare or endure where courage or fortitude are required; he may encounter the most inhospitable climes or boldly venture into the field of battle; and so long as he finds that he has a strong hold upon life, and that he is surrounded by things familiar to the touch and sight, his spirit fails not, and he feels strong in himself. It is altogether a different thing, when the body feels the rude assaults of disease, and the shadows of death begin to thicken and obscure the vision of this world; when the connection with life is sensibly diminishing, and the great and overwhelming realities of another world are beginning to obtrude upon the soul; for then the man finds himself engaged in a conflict with an enemy so potent and dreadful, that his courage avails him little; and his best skill is foiled in the unequal strife, and he is startled at his want of preparation for the scenes which are bursting upon his dying eyes, amidst which he sees the judgment seat and the angry God who sits upon it. It is a terrible thing to die unassisted by one mightier than death, and it is eternal ruin for the soul to go into the presence of God, with no higher claims to his favor than those which personal merit may have secured. The world regards it not, however often and loudly preached, but it is nevertheless solemnly true, that the presence, support, love, and mediation of Jesus Christ are essential to the soul's peace in the conflicts of death, and the opening realities of eternity; and the more these are enjoyed, the more confident will we be, the more joyful to bid adieu to the world, and the more triumphant our cry, "O death where is thy sting! O grave where is thy victory!"

### VIEWS OF ROMAN CATHOLIC STATESMAN, OF THE CHARACTER AND OBJECTS OF THE JESUITS.

In a late session of the French Chambers, a most animated discussion took place on the revival of the Jesuits in France. It being known before hand that this subject was to come up, the eagerness to witness it was so great that although the sittings began at half past one, the ladies who were in great numbers arrived before eleven, and at eight in the morning the doors were besieged by a multitude anxious to obtain admission. M. Thiers opened the debate in a speech of two hours, which commanded profound attention, the object of which was to encourage the Government to execute the existing laws of France against the Jesuits. He enumerated the various edicts issued, and laws enacted against the "company of Jesus," pointing out many that could be still enforced. He shewed that although proscribed by the *ancient regime*, invisible during the first revolution, kept down by the empire, condemned even by the restoration, and tolerated since 1830 so long as they concealed themselves, the society of the Jesuits had now formed again into regular congregations, recovered immense influence and become rich and powerful enough to establish two "provinces," one of Paris, the other of Lyons; to possess 27 seminaries, other houses, and to maintain many more members than they chose to avow. To the increasing ascendancy and to the instigation of the Jesuits he imputed the growing hostility, which a part of the French clergy had for some time past displayed to the laws of the kingdom; and after professing the utmost respect to the Catholic religion, he declared that although far from entertaining all the popular prejudices propagated against the Jesuits, it was high time, that, supported as it was by the Chamber, the Government should endeavor to separate the cause of a prohibited order from that of the regular clergy.—

M. Dupin declared that the society of Jesuits was most dangerous. It was constituted for perpetuating the rule of Ignatius Loyola. It was formed in a foreign country, and had a chief who was an absolute despot. It divided Christendom into provinces, was under foreign influence, had well organised finances, and a perfectly established administration; and the oath was a perfect abnegation of the individual, which placed the man in the hands of his general, "like a stick in the hands of a blind man." Then with regard to the objects of the Society; they were completely political, and their great aim was universal sovereignty and dominion.

The discussion continued two days, and was finally concluded by the adoption of the following resolution, by an almost unanimous vote: "The Chamber, being confident that the Government will attend to the execution of the laws (against the Jesuits) passes to the order of the day."

### RELIGIOUS TOLERATION OF THE INDIAN GOVERNMENT.

The Government of India have answered the native Memorialists against the toleration clauses of the *Lex Loci*, (noticed in our paper of the 22d of May,) from which we extract a few Paragraphs.

"5. The principle which guides the Government of India is, that all the religions professed by any of its subjects shall be equally tolerated and protected."

"8. It is just and right to tolerate a Hindu in the exercise of his religion, and to protect him from any loss of property on account of the profession and exercise of his religion."

"9. But the Hindu religion is not the only religion which the Government is bound to consider; the Christian Religion, the Mahomedan religion, and all others which exist in the country, have claims, (quite independent of the fact, that one of them is the religion of the Government itself) to the same impartial protection, and if a Hindu becomes a Christian or a Mohamedan, it is just and right that he too should he protected against any loss of property on account of the profession or exercise of the religion he has adopted."

"30. The Memorialists say that the xii. Clause will, if actually passed, annul the Hindu Law of Inheritance. If this were true, it would follow that the whole Hindu Law of Inheritance consists of provisions for punishing freedom of conscience, and the Government might feel bound to annul it. But the Hindu Law of Inheritance is far from being the unjust and barbarous thing here implied, and the government can conscientiously continue to enforce the greater part of its rules."

"31. The Memorialists speak also of the proposed Law as one which would "compel the relations of the convert to *reward* his apostacy." If this were a correct description, the Law would be justly open to objection. The Law should provide neither reward nor punishment for change of religious opinion. It should leave every man to the dictates of his understanding and his conscience, unbiassed by any motive of interest; and this is what the proposed Law does."

### THE BIBLE THE ONLY RULE OF FAITH.

"The bible (said Chillingworth,) the bible only is the religion of Protestants. I will take no man's liberty of judging from him neither shall any one take mine from me. I will think no man the worse man, or the worse Christian—I will love no man the less, for differing in opinion with me And what measure I mete to others, I expect from them again. I am fully assured that God does not, and therefore man ought not, to require any more from any man than this—to believe the Scripture to be God's word; to endeavor to find the true sense of it, and to live according to it."

Admirable sentiments! Who can refrain from loving and admiring them? Oh that we could see the universal prevalence of such a spirit as they exhibit.

May all our readers believe the Scripture to be God's word; endeavor with diligent study and prayer to find the true sense of it, never doubt for a moment, that it is their duty and privilege to judge of its meaning, and live accordingly.

### TRY AGAIN.

Robert Bruce was one of the sovereigns of Scotland, and is very famous in the history of that country. In one of the wars, he slept at night in a barn, and in the morning, as he lay on his bed of straw, he saw a spider climbing up a beam of the roof. The insect fell to the ground, but immediately tried again to ascend. Again and again it fell, until it had done so twelve times, but the thirteenth time it tried it was sucessful, and reached the ridge of the barn! Bruce struck by this circumstance, is said to have started from his place, exclaiming: "This contemptible insect has taught me perseverance. I will follow its example. Have not I been defeated twelve times by a superior force? One more battle, and my country is free." In a few days the great battle of Bannockburn was fought, and Bruce was victorious.

### GREY SQUIRRELS.

A correspondent of the Philadelphia North America, writing from the borders of Lake Champlain, confirms a statement made by Dr. Morse in his well known geography, and which has by some been regarded as fabulous. He says:—

"A word on the instinct of the squirrels here. When they wish to move from one island to the other, they watch the wind till it blows in the right direction, and then you will see them in dozens coming to the beach, each with a large piece of bark in his mouth, which he launches, and then jumping on board, turns up his tail for a sail, and over he goes to the port of his destination. I might have shot them while making sail, but it looked to me as something almost wicked."

*For the Morning Star.*

At a Meeting of the Advocates and Proctors practising at Jaffna, held on the 28th June, 1845, at the Chambers of Mr. Gambs, S. J. Boileau, Esq. *Deputy Queen's Advocate*, in the Chair, the following resolutions were passed.

1. That a Library be established to be designated—"The Law Library of Jaffna," and that all Advocates and Proctors their apprentices and others, be eligible as members thereof.

2. That the Honourable the Judges of the Supreme Court be requested to become the Patrons of the Institution, the District Judge of Jaffna President, and the Commissioners of the Courts of Request in the Northern Province vice Presidents thereof.

3. That the Rules now read be adopted.

4. That the following Gentlemen be appointed officers of the Institution and ex officio members of the Committee.

S. J. Boileau, Esq. *Chairman*; R. W. Langslow, Esq. *Treasurer*; and G. A. Gambs, Esq. *Librarian*; and that the Secretary of the District Court of Jaffna be ex officio Secretary of the Library.

5. That in addition to the foregoing officers the following Gentlemen be apointed members of the Committee for the present year.

| | |
|---|---|
| Mr. C. G. Kock, | Mr. C. Speldewinde, |
| Mr. P. F. Toussaint, | Mr. W Maylwaganum, |
| Mr. J. Modder, | Mr. S. Waytilingam, |
| Mr. J. T. Anderson, | Mr. P. Bastiam Pulle |

6. That as the establishment of this Library will prove beneficial to the inhabitants of the Northern Province a voluntary subscription be solicited from them and a subscription paper circulated for that purpose.

7. That the proceedings of this meeting be published in the two Colombo papers and the Morning Star as soon as possible.

8. That the thanks of the meeting be given to S. J. Boileau Esq. for his conduct in the Chair and for the interest he has taken in the establishment of the Library.

S. J. Boileau, *Chairman*,
*Jaffna, June 28th, 1845.* F. C. Grenier, *Secretary*.

"*A Balance*" in the 2d. No. of the *Touch Stone* complains of the non-admission into the Star of a communication sent by him in Dec. 1842, in reply to some remarks of ours on a communication of his, which were published in No. 23, of the Star for 1842. The remarks had reference chiefly to the sale of indulgences in the Roman Church, and the character of the reformation effected by Luther. At the close of our remarks—we proposed the following Questions to "A Balance" which had also been before proposed in our paper of May 19, 1842, and had received no notice, viz.

1. "Is it in accordance with the principles and practice of the Roman Church to give *free circulation* to the word of God?"

2. "If the free and promiscuous circulation of the scriptures is prohibited—what is the rule by which the Roman Church would have them distributed?"

3. Is there any Catholic version of the Scriptures in the Tamil language?"

4. "If there is none why are not measures taken to procure one."

And it was further added: "It is proper that we require in behalf of our readers, an answer to these questions, *before engaging in any further discussions* on the subject of our former remarks." But no answer was given; can "A Balance" tell us why?—Our readers will perceive that the silence of our correspondent on these questions was a sufficient reason for excluding his article from publication.

"*A Balance,*" in the Touch Stone No. 2, declares that "such a wicked man as Luther never lived in the world."—Will he explain for the benefit of our readers on what principle the wickedest man that ever lived would devote his best energies to the translation and free circulation in his native tongue, of the *Holy Scriptures*?

Dear Mr. Editor,

Since you shewed in the Star, that the body of St. Francis Zavier is *not* in an *incorruptible* state, a thought came to my mind that Protestantism is a true religion, but to my great joy, I see in the last No. of the Touch Stone a communication signed *Francisco*, which, from the testimony given by Protestants themselves, supports my ground, that the body of F. Zavier is in an incorruptible state even to this day at Goa. No other testimony is wanted; therefore, as you signified your intention of taking a voyage to Goa and seeing the miracle, I hope you will go this time and gratify your curiosity and remove your doubt.

Yours,
Soosapillay.

*Remarks.*

Before going to Goa, as our Correspondent proposes, we wish to edify our readers with a few remarks on the subject of the alleged incorruptibleness of Zavier's body. The statement about the body, must, of course, be either true, or false.—

*If it is true* that the body of St. Francis Zavier, who is known to have died in 1552, is still preserved at Goa in an incorruptible state; and especially, *if it is true* that it presents—as it is said by the Roman Catholics it does,—"only excepting motion, all the appearances of life;" and *if it is true* that when wounded the blood flows,—as the Catholics say it does,—"of so pure a crimson, that the most healthful bodies could not send out a more living colour," and most especially, *if it is true*,—as is alleged by the Catholics,—that "miracles were wrought in the presence of the holy body—the blind received their sight, those who were taken with the palsy recovered the use of their limbs, and the lepers became clean as babes," then it must be admitted to be a most marvellous thing, deserving the serious attention of every one who pretends to doubt the truth of the Roman Catholic doctrines. If all that is said of it *be true*, we do not see how any honest and candid man, can doubt the reality of a divine interposition, and be compelled to admit that the *religion* which is attested by such miraculous appearances and effects *must be true*; for it cannot be supposed that such an appearance of the corpse, and such miraculous cures, as are said to be witnessed in its presence, could be effected by Satanic agency, but must be truly the work of God, and if wrought of God, it must be for the worthy and benevolent purpose—if Romanism is true—of leading those who already believe in its doctrines to a firmer faith and of convincing the doubtful and unbelieving of their guilt in rejecting it.

